# புகழ்பெற்ற பிரெஞ்சு யோகா ஆசிரியை திருமதி சார்லோட் சோபினுடன் பிரதமரின் சந்திப்பு

ஜூலை 14, 2023

பிரதம மந்திரி திரு நரேந்திர மோடி 14 ஜூலை 2023 அன்று பாரிஸில் புகழ்பெற்ற பிரெஞ்சு யோகா ஆசிரியரான திருமதி சார்லோட் சோபினை சந்தித்தார்.

யோகாவில் திருமதி சோபினின் ஆழ்ந்த நம்பிக்கையையும், பிரான்சில் யோகாவை மேம்படுத்துவதில் அவர் செய்த சாதனைகளையும் பிரதமர் பாராட்டினார்.

யோகா எவ்வாறு மகிழ்ச்சியைத் தருகிறது மற்றும் முழுமையான நல்வாழ்வை மேம்படுத்துகிறது என்பது குறித்து திருமதி சோபின் தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார். சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு யோகா மீதான ஆர்வம் அதிகரித்து வருவது குறித்தும் அவர்கள் கருத்துகளை பரிமாறிக் கொண்டனர்.

**பாரிஸ்**
**ஜூலை 14, 2023**